**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.238/2017
Prosecution witness.05

| | |
|---|---|
| பெயர் : பாஸ்கரன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of November 2024.

18.11.2024

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் இராமநாதபுரம் பணிமனையில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். 2014 ம் வருடம் எனது அண்ணன் மகன் சதீஸ்காந்த் திருவரங்கத்தில் உள்ள திருஇருதயம்மாள் மேல்நிலைப்பள்ளியில் 10 ம் வகுப்பு படித்து வந்தான். எனது தாயார் இறப்பிற்கு வந்துவிட்டு மீண்டும் பள்ளிக்கு 02.01.2014 ம் தேதி சென்றான். அன்று மாலை 05.00 மணியளவில் எனது அண்ணன் மகன் சதீஸ்காந்த் தூக்குபோட்டு இறந்துவிட்டதாக எனது அண்ணன் மனைவி அ.சா.1 சாந்திக்கு போன் மூலம் தகவல் வந்தது.

2) உடனடியாக எனது அண்ணன் மனைவி அ.சா.1 சாந்தி எனக்கு போன் செய்து கூறினார். நான் உடனே பள்ளிக்கு சென்று பார்த்தபோது எனது அண்ணன் மகன் சதீஸ்காந்த் உடலை தரையில் படுக்கப்போட்டு இருந்தார்கள். அவர் இறந்ததற்கு என்ன காரணம் என்று எங்களுக்கு தெரியவில்லை. பின்பு கீழத்தூவல் காவல்

நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்த எனது அண்ணன் மகன் சதீஸ்காந்த் உடலை ஒப்படைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) என்னை போலிசார் விசாரிக்கும்போதும் நான் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளையும் கூறினேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று நான் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். எனது அண்ணன் மனைவி அ.சா.1 சாந்தி எனக்கு எத்தனை மணிக்கு போன் செய்தார்கள் என்றால் மாலை 05.00 மணியளவில் போன் செய்தார். நான் பள்ளிக்கூடத்திற்கு மாலை 06.30 மணிக்கு சென்றேன். நான் பள்ளிக்கு சென்றபோது யார் யாரெல்லாம் அங்கு இருந்தார்கள் என்றால் ஊரில் உள்ள பொதுமக்கள் எல்லோரும் அங்கு இருந்தார்கள்.